# நான் அசைக்கப்படுவதில்லை. சங் 16 : 8

**நீ அசைக்கப்படுவதில்லை**

அசைத்து, ஆட்டி பிடுங்கி விடுவார்களோ என ஐயப்படும் சகோதரியே சகோதரனே,

பயப்படவேண்டாம் நீ அசைக்கப்படுவதில்லை – ஏன் தெரியுமா ? கர்த்தரை எப்பொழுதும் உனக்கு முன்பாக வைத்திருக்கிறாய். அவரும் உனது வலது பாரிசத்தில் இருக்கிறார்.

ஆதலால் இந்த மாதம் அடிக்கடி கீழ்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**நான் அசைப்படுப்படுவதில்லை– என்பதாக.**

பக்தன் பாடுகிறான்.

வெள்ளங்கள் புரண்டு மோதினாலும்
உள்ளத்தின் உறுதி அசையாதே
ஏழு மடங்கு நெருப்பின் நடுவினில்
நேசர் நம்மோடங்கு நடக்கின்றார்.

எக்காலத்தும் நம்பிடுவோம் திக்கற்ற மக்களின் மறைவிடம்
பக்க பலம் பாதுகாப்பும் இக்கட்டில் இயேசுவே அடைக்கலம்
சேனைகளின் கர்த்தர் நல்லவரேசேதமின்றி நம்மை காப்பவரே– என்பதாக.

அடிக்கடி இந்தப் பாடலையும் இந்த மாதத்தில் பாடுங்கள்.

அப்பொழுது நீ அசைக்கப்படுவதில்லை.

**சங்கீதம் 16 : 8ல் தாவீது கூறுகிறார்.** கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை

**நீயும் அசைக்கப்படுவதில்லை.**

கர்த்தரை எப்பொழுதும் உனக்கு முன்பாக வை.

**அப்படி என்றால் அர்த்தம் என்ன ?**

இடைவிடாமல் ஜெபம் பண்ணு, எப்பொழுதும் ஸ்தோத்திரம் செய்யுங்கள் என்பதாகும். எப்பொழுதும் ஜெபிப்பவர்களும், துதிப்பவர்களுமே கர்த்தரை எப்பொழுதும் தனக்கு முன்பாக வைப்பவர்கள். ஒருவர் ஜெபிக்கும் துதிக்கும் பொழுதெல்லாம் கர்த்தரை தங்களுக்கு முன்பாக வைக்கிறார்கள். ஜெபிக்காத, துதிக்காத ஒருவன், கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என சாட்சி கூற முடியாது.

**மாற்கு 3:14 கூறுகிறது :** இயேசு பன்னிரெண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடே கூட இருக்கவும் . . . . . . .ஆம், தம்மோடே கூட இருக்கும்படியாக, சீஷர்களை தேவன் தெரிந்து கொண்டார்.

சகோதரனே சகோதரியே,

**நீ தேவனேடே கூட இருக்க வேண்டும், அப்பொழுது தேவன் உன்னோடே கூட இருப்பார்.**

**சங்.23:4 ல் தாவீது கூறுகிறார்.** தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர். என்பதாக.

அர்த்தம் என்ன ? நான் உம்மோடே கூட இருக்கிறேன்– என்பதாக. அப்படியானால் அர்த்தம் என்ன ? எப்பொழுதும் ஜெபித்து துதித்துக் கொண்டே இருக்கிறேன்–என்பதாக.

**1 இராஜாக்கள் 17 : 1 கூறுகிறது**

எலியா ஆகாபை நோக்கி இந்த வருஷங்களிலே பனியும், மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு, முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்கிறேன்

தேவனுக்கு முன்பாக நிற்கிறவன் இயற்கையின் மேல் அதிகாரம் உடையவனாயிருக்கிறான்.

ஜெபிக்கிறவன் – தன்னை காக்கிறான்
குடும்பத்தை – காக்கிறான்
ஊழியத்தை – காக்கிறான்
தேசத்தை – காக்கிறான்

ஜெபிக்கிறவன், துதிக்கிறவன் தான் தேவன் முன்னால் நிற்கிறவன் என்ற சத்தியத்தை இந்த மாதத்தில் அறிந்து கொள்ளுங்கள்.

**நீ தேவன் முன்னால் நின்றால், தேவன் உன் முன்னால் நிற்பார்.**

அப்பொழுது நீ தைரியமாய் கீழ்கண்டவாறு சொல்லலாம். கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். நான் அசைக்கப்படுவதில்லை என்பதாக. மெய்யாகவே **"நீ அசைக்கப்படமாட்டாய்"** ஆமென்.